[1st September 1970

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அப்படிப்பட்ட தகராறு இருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை. இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் ஏமாற்றப்பார்க்கிறார்கள். அது தான் அரசாங்கத்தின் கவனத்திற்கு வருகிறது. விவசாய இலாக்காவிலிருந்து இன்னின்ன ஏக்கர் என்று எல்லை வரையறுத்து உத்திரவு போடுகிறார்கள். ஒவ்வொரு ஆலைக்கும் அந்த உத்தரவு இருக்கிறது. விவசாயிகள் அந்த உத்தரவின் அடிப்படையில் தான் போய் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. பதிவு செய்கிற முறையில் தான் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப சர்க்கரை விலை குறைந்துவிட்டால் ஆலை முதலாளிகள் விவசாயிகளை ஏமாற்றப் பார்க்கிறார்கள். அதைப் போலவே வெல்லத்தின் விலை ஏறிவிட்டால், ஆலைகளை ஏமாற்றப் பார்க்கிறார்கள். இது ஒரு பொருளாதாரப் பிரச்னையாக இருக்கிறது. எங்கே பார்த்தாலும், இப்போது புரொகிபிஷனை எடுத்துவிட்டதால் வெல்லத்திற்கு அதிகமான கிராக்கியில்லை. எதிர்காலத்தில் வெல்லத்தால் இந்தச் சிக்கல் நம் சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்படாது என்று நான் கருதுகிறேன்.

Tamil Nadu State Transport Buses

*67. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that many buses belonging to Tamil Nadu State Transport Department are emitting huge volume of thick and obnoxious smoke which is injurious to health ; and

(*b*) if so, the action taken or proposed to be taken by the Government to prevent this hazard ?

தமிழ நாடு அரசு போக்குவரத்துப் பேருந்துகள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாடு அரசு போக்கு வரத்துத் துறையின் பேருந்துகள் பல ஓடும்பொழுது அடர்த்தியான புகையை வெளிவிட்டுக் கொண்டிருக்கின்றன என்றும், அது சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கின்றது என்பதும் அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், இச்சுகாதாரக் கேட்டைத் தவிர்ப்பதற்காக அரசினால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ)&(இ): தமிழ் நாடு அரசு போக்குவரத்தைச் சேர்ந்த சில பேருந்துகள் பெருமளவில் புகையை வெளிவிடுகின்றன. எரிபொருளூட்டுக் குழாய்ப் பகுதியைப் பழுது பார்ப்பதன் மூலம் அவற்றிலுள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு வருகின்றன.

1st September 1970]

THIRU G. VASANTHA PAI : Will the Hon. the Minister for Industries kindly take into consideration what is happening in respect of the same problem faced by the Japanese and in some of the East European countries ? They have devised a system by which the exhaust pipes and carburetor are checked very often and this smoke is prevented from coming out of the buses. I also find that in the modern buses which we are putting on the roads, we have got the exhaust pipe going up and the smoke is going up as if it is through a chimney. You will see that in the latest buses coming on the road this smoke comes through the exhaust pipes which are fitted to the top. Can the Government, in the light of the experience that we are having in the streets of these buses emitting smoke every now and then, resort to the Japanese experience or the experience of the European countries and try to get some information about it ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : உறுப்பினர் கூறிய கருத்துக்களை நம்முடைய இலாகாவுக்கு அனுப்பி அதைப்பற்றிப் பரிசீலிக்கச் செய்யலாம்.

THIRU D. SANTOSHAM : This problem is becoming quite a serious one. Not only the State Transport buses but other lorries and buses are also emitting this obnoxious smoke which is becoming a very serious health hazard. I am attending to the air pollution which has become a grave menace. Will the Hon. the Minister for Public Works take some expert advice on this matter so that this may be arrested in the initial stages ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையில் உள்ள பஸ்கள் தான் புகை கக்குகின்றன என்று சொல்லாமல், மற்ற தனியார் துறை பஸ்களிலும் இதுபோன்ற புகைபோக்கிக் கோளாறுகள் இருக்கின்றன என்று சொல்லியதற்காக முதலில் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் அரசு பஸ்களில்தான் இந்தக் குறைகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது பலரால். இதைப்பற்றி இப்போது ஆலோசித்து வருகிறோம். அமெரிக்க நாட்டு நிபுணர்கள் கொண்ட ஒரு கருத்தரங்கு நடந்தது. எப்படி இந்தக் குறையை நிவர்த்திப்பது என்று ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க ஏற்பாடாகியிருக்கிறது.

> "The defects in them are being rectified by servicing fuel injection pipes in them"

அதில்தான் முக்கியமான குறை இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தக் குழாயை சரியாகப் பொருத்திவிட்டாலும், மற்ற தேவையான அளவில் பழுதுபார்த்துவிட்டாலும் போதுமென்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் கவனித்து வருகிறது.

[Thiru M. Ethirajalu rose . . .]

MR. CHAIRMAN : Without my permission, the hon. Member should not stand up.

[1st September 1970

திரு. எம். எத்திராஜுலு : பழைய பஸ்களில்தான் இந்தப் புகை வருவதாகச் சொல்லப்படுகிறது. புதிய பஸ்களில் இந்த மாதிரி வருவதில்லை. கொஞ்ச காலத்திற்கு முன்பாக வாங்கப்பட்ட பழைய பஸ்களை மாற்றிவிட்டு புதிய பஸ்களையே விடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : ஒவ்வொரு பஸ்ஸுக்கும் குறிப்பிட்ட கால அளவு உண்டு. அந்தக் கால அளவு வரையில் அவற்றை உபயோகிக்கவேண்டியிருக்கிறது. அவ்வப்போது பழையவைகளை மாற்றிக்கொண்டுதான் இருக்கிறோம். இப்போதுகூட அரசாங்கம் 70 பஸ்களை வருகிற இரண்டு மாதங்களுக்குள் விடுவதற்கு அனுமதி தந்திருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம்.

Tachometers

***68. *Q*—.THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal for the installation of Tachometers and its periodical check-up by the Regional Transport Officers in Heavy Passenger Vehicles to avert accidents ?**

விசைமானிகள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக பெரிய அளவுப் பயணி வண்டிகளில் விசைமானிகள் அமைப்பதற்கும், வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் அவற்றை அவ்வப்போது பரிசோதனை செய்வதற்குமான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இல்லை.

Scavenging Work

***69. *Q*.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :**

(*a*) whether it is a fact that children below 15 years of age are doing scavenging work in Salem and Ramanathanpuram Municipalities; and

(*b*) if so, the action taken by the Government to prevent the child labour ?

துப்புரவு வேலை

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சேலம், ராமநாதபுரம் நகராட்சிகளில், 15 வயதுக்குக் குறைவான சிறுர்கள் துப்புரவு வேலை செய்கின்றனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், சிறுர்கள் தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?